# பிரமாண்ட சென்ட்ரல் சதுக்கம்: விரைவில் துவங்குது கட்டுமானம்

– நமது நிருபர் –

மெட்ரோ நிலையம் எதிரில், 20 மாடிகளுடன், சென்ட்ரல் சதுக்கம் கட்டும் பூர்வாங்க பணிகள், ஜரூராக நடந்து வருகிறது. பூங்கா மற்றும் பாதுகாப்பு, சுற்றுச்சுவர் கட்டும் பணி முடிந்ததும், சதுக்கம் கட்டுமான பணி, மூன்று மாதங்களில் துவங்க உள்ளது.

சென்னையில், முக்கிய நிலையங்களாக, சென்னை எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் ரயில் நிலையம், மூர்மார்க்கெட் புறநகர் மின்சார ரயில் நிலையம், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம், பூங்கா நகர் மின்சார ரயில் நிலையங்கள் உள்ளன.

## சகல வசதி

இவைகளுக்கு அருகில், பாரம்பரியமிக்க, ரிப்பன் மாளிகை, விக்டோரியா ஹால், ராஜிவ் அரசு மருத்துவமனை மற்றும் தெற்கு ரயில்வே தலைமை அலுவலகம் ஆகியவை உள்ளன.

இதனால், சென்னையில் மற்ற இடங்களை விட, இப்பகுதியில், வாகன போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது.

முக்கிய இடமாக திகழ்வதால், சென்ட்ரல் மெட்ரோ நிலையம் – விக்டோரியா ஹால் இடையே உள்ள இடத்தில், நவீன தொழில் நுட்பத்தில், தொலை நோக்கு பார்வையுடன், மெட்ரோ ரயில் நிறுவனத்தால், 400 கோடி ரூபாய் செலவில், 20 மாடிகளுடன், சென்ட்ரல் சதுக்கம் கட்டடப்பட உள்ளது.

பயணியர் விடுதிகள், ஷாப்பிங் மால், பொழுது போக்கு பூங்கா, ஓட்டல்கள் மற்றும் தரைக்கு அடியில், மூன்றடுக்கு வாகன நிறுத்தம் என, சகல வசதிகளுடன் இந்த சதுக்கம் கட்டப்பட உள்ளது.

இந்த பகுதியில், கூட்ட நெருக்கடியை தவிர்க்க, மாநகராட்சி கட்டடம், சென்ட்ரல் மெட்ரோ நிலையம், புறநகர் மின் சார ரயில் நிலையம், எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் ரயில் நிலையம்.

மேலும், ராஜிவ் அரசு மருத்துவமனை மற்றும் தெற்கு ரயில்வே அலுவலகங்களில் இருந்தும், இந்த சதுக்கத்துக்கு எளிதாக செல்ல ஏதுவாக, தரை வழியாகவும், சுரங்கம் வழியாகவும், இணைப்பு பாதைகள் கட்டப்பட உள்ளன.





■ மெட்ரோ ரயில் நிலையம் எதிரில், சென்ட்ரல் சதுக்கம் கட்டும் ஆரம்பகட்ட பணிகளுக்கு, பாதுகாப்பு சுற்றுச் சுவர் கட்டடப்பட்டு வருகிறது.

கட்டுமான பூர்வாங்க பணிகள், 2019ல் இருந்து நடந்து வருகிறது.

## இருபுறமும் நடைபாதை

இந்த சதுக்கம் கட்டப்படும் இடத்திற்கு அருகில், பாரம்பரிய கட்டடங்கள் தவிர, மற்ற கட்டடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, சாலைகள் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில், பூந்தமல்லி நெடுஞ்சாலை, தேவையான அளவு விரிவுப்படுத்தப்பட்டு உள்ளது.

சென்னை மாநகராட்சி கட்டடத்தில் இருந்து, தெற்கு ரயில்வே தலைமை அலுவலகம், ராஜிவ் அரசு மருத்துவமனை வரை, இடைப்பட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலையின் இரு புறமும், நடைபாதை, பூங்கா கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன.

தெற்கு ரயில்வே மற்றும் மெட்ரோ நிறுவனத்துக்கு சொந்தமான இடத்தில், எம்.டி.சி., பஸ் நிறுத்தம் தேவையான அளவில் விரிவுப்படுத்தப்பட்டு வருகிறது.

சதுக்கம் கட்ட, அளவீடு செய்யப்பட்டுள்ள இடத்தை தவிர, மற்ற பகுதிகளில், சுற்றுச்சுவர் கட்டும் பணி நடந்து வருகிறது.

## அலங்கார கோபுரங்கள்

இதற்காக, விக்டோரியா ஹால் எதிரில், பூந்தமல்லி நெடுஞ்சாலையோரம் உள்ள, பழைய சுவர் அப்புறப்படுத்தப்பட்டு, புதிய சுவர் கட்டுமான பணி நடந்து வருகிறது.

இத்துடன், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் – மூர்மார்க்கெட் ரயில் நிலையத்திற்கு இடைப்பட்ட பகுதியில், அழகிய பூங்கா, வண்ண நீரூற்றுகள், அலங்கார மின் விளக்கு கோபுரங்கள், பயணியர் அமர, பளிங்கு கல் இருக்கைகள், நீரூற்றுகள், வண்ண மின்விளக்கு கோபுரங்களும் அமைக்கப்பட உள்ளன. நிழல் தரும் மரங்கள் நடப்பட உள்ளன. பூங்கா மற்றும், பாதுகாப்பு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி, துரிதமாக நடந்து வருகிறது.

இப்பணிகள், மூன்று மாதங்களில் முடியும். இதன்பின், விக்டோரியா ஹால் எதிரே, சென்ட்ரல் சதுக்கம் கட்ட, கட்டுமான பணி துவங்க உள்ளது.